## ஜூலை - 8

**"ஜீவனுள்ள தேவனுடைய சபை, சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது."**

**- 1தீமோ 3 : 15.**

சபை என்ற பெயர் சரியானபடி கர்த்தரின் சபைக்கு மாத்திரம் பொருத்தமானதாயிருக்கிறது. இந்த கர்த்தரின் சபை அவ்வளவு முக்கியமில்லாததும், அவ்வளவு ஆடம்பரமற்றதும், ஒத்துப்பார்க்கில், இவ்வுலகின் ஐசுவரியத்தில் அவ்வளவு தரித்திரமானதாயிருக்கிறதால், உலகமக்களின் நோக்கின்படி அது அறியப்படாததும், அறியப்படக்கூடாததுமாயிருக்கிறது. அது மனிதனால் உண்டு பண்ணப்பட்டதாகவோ, மனிதனால் ஆளப்படுகிறதாகவோ இல்லை. அதன் அங்கத்தினர் பூமியில் பதிவு செய்யப்படவுமில்லை. ஆனால் பரலோகத்தில் பதிவுச் செய்யப்பட்டிருக்கிறார்கள். (எபி 12 : 23) அதன் தலையும், கண்காணியுமானவர் கர்த்தரே. அதன் பிரமாணம் அவருடைய வார்த்தை. அதற்கு ஒரே ஒரு கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் உண்டு. பரிசுத்த அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், இவர்களுடைய சாட்சிகளின் பேரில் அது கட்டப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவே அதற்கு முக்கிய மூலைக்கல்லாயிருக்கிறார்.

- Z '99, 37 (R 2427)

கிரேக்க பாஷையின் படி "சபை" என்ற வார்த்தை தேவனுடைய ஜனங்களில்ன் தெரிந்துக் கொள்ளப்பட்ட குணத்தைக் (நடத்தையை) குறிக்கிறது. அவர்கள் உண்மையாகவே வெளியே வர அழைக்கப்பட்டவர்கள்." ஏனென்றால், அந்தகாரத்தின் இராஜ்ஜியத்திலிருந்தும், சாத்தானின் ஆட்சியிலிருந்தும் கர்த்தரால் பிரிக்கப்பட்டு தேவனின் பிரிய குமாரனுடைய இராஜ்ஜியத்துக்குள்ளும், கிறிஸ்துவின் ஆட்சிக்கடியிலும் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். அவளைத் தாங்கும் தூணும், அவள் கட்டப்பட்டிருக்கிற அஸ்திபாரமும் அவளுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, இந்தப் பாறையின் மேல் ஸ்தாபிக்கப்பட்டதினால், நித்திய காலமாக அவள் நிலைத்திருப்பாள்.

- P '26, 95.

**ஒத்த வாக்கியங்கள் :-**

ஏசா 62:12; மத் 15:13; 16:18; எபி 12:22,23; எபே 1:22,23; 2:20-22; 5:23-32; யோவா 15:1-8; ரோமா 12:4,5; 1கொரி 3:9; 12:12-28; 2கொரி 6:16; எபி 3:6; வெளி 21:2,9,10.

**கோபுர வாசிப்பு** : Z '03, 37 (R 3143).

**வினாக்கள்** : சபை சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் என்ன? அவை என்னை எவ்வாறு பாதித்தது? அதன் பலாபலன்கள் என்ன?